டார், இவைகளுக்கெல்லாம் என்ற குற்றச்சாட்டுகளுக்கு நான் ஆளாகத் தயாராக இல்லை. ஆகவே என்னிடம் இருக்கிற பதில்களை நான் முழுவதும் படிப்பதற்கு மற்றவர்களுக்குத் தந்திருக்கிற நேரம், அத்தனை பேரும் பேசுவதற்கு நீங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலையிலே வைத்துக் கொள்ளலாமா, அல்லது தொடர்ந்து பேசுகிறீர்களா, என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்). நாளைக்கு பால் கமிஷன் அறிக்கை மற்றும் வேறு சில எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. என். சங்கரய்யா: நாளைக்கு எப்பொழுதும் போல் அதை எடுத்துக்கொள்ள வேண்டியது. மற்றபடி அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுத்தால்தான் சரியாக இருக்கும். மாலை, எங்களுக்கு வேறு அவசரமான குழுக் கூட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, மாலை சாத்தியமில்லை. நாளை காலை வழக்கம் போல் எடுத்துக் கொண்டு, பிறகு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி யோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை காலை கேள்வி நேரத்தை நீக்கிவிட்டு வைத்துக் கொள்ளலாமா?

திரு. துரை முருகன்: கேள்வி நேரம் இருக்கட்டும் அதை நீக்காதீர்கள், அது எங்களுடைய உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 11–2–1982 ஆம் தேதி காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*99. நீதிபதி திரு சி. ஜே. ஆர். பால் அவர்களைக் கொண்ட விசாரணைக்குழு அளித்த அறிக்கையின் மீது அரசு மேற் கொண்ட நடவடிக்கை பற்றிய குறிப்பாணை சம்பந்தமாக, பொது (சட்டம் ஒழுங்கு—அ) துறையின் 1–2–1982 ஆம் தேதி யிடப் பெற்ற 161 ஆம் எண். அரசாணைக்கான மூல இணைப்பின் ஆங்கில மொழியாக்கம் (1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60·1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.